

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி மற்றும் காப்புறுதி நிவாரணத்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று (15.07.2016) வழங்கினார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 447/2015 நாள்: 15.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி மற்றும் காப்புறுதி நிவாரணத்தொகைக்கான காசோலைகளை இன்று (15.07.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலன்கருதி, மீன்வளத்துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். மேலும் மீன்பிடி தொழிலில் ஈடுபடும்போது, மீனவர்கள் வழி தவறி பிற நாட்டு கடல் எல்லை பகுதிக்கு செல்வதால், அந்த நாட்டு கடலோர காவல்படையினரால் கைது செய்யப்படுகிறார்கள். இவர்களை உடனடியாக விடுவிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கடியப்பட்டணம் மீனவர் கிராமத்தை சார்ந்த 3 மீனவர்கள் துபாய் நாட்டை சேர்ந்த தனியார் மீன்பிடி விசைப்படகில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, வழிதவறி ஈரான் நாட்டு கடல் பகுதியில் சென்றதால், ஈரான் நாட்டு கடலோர காவல் படையினரால் 07.02.2016 அன்று கைது செய்யப்பட்டு, ஈரான் நாட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் முயற்சியால் 21.04.2016 அன்று விடுவிக்கப்பட்டார்கள். விடுவிக்கப்பட்ட மீனவர்கள் 01.05.2016 அன்று தங்களது சொந்த கிராமமான கடியபட்டணத்திற்கு திரும்பியுள்ளனர். அவர்கள் தங்கள் புதுவாழ்வை தொடங்குவதற்காகவும், அவர்களின் குடும்ப வாரியநிலையை கருத்தில்கொண்டும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2,00,000/- உதவித்தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மேலகடியபட்டணத்தை சார்ந்த திரு. கில்லாரியான், திரு. பிரபு மற்றும் கீழகடியபட்டணத்தை சார்ந்த திரு. டேவிட் ஆகிய மூன்று மீனவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகையாக தலா ரூ. 2 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று (15.07.2016) வழங்கினார்.

அதனை தொடர்ந்து மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ், அகஸ்தீஸ்வரம் வட்டம், கோவளம் மீனவ கிராமத்தை சார்ந்த மீனவ மகளிர் திருமதி. சகாயலதா, க/பெ. சகாய ஆரோக்கியம், (வயது 35) என்பவர் 30.05.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், கூடன்குளம் அருகே குழந்தையேசு கோவில் வளாகத்தில் மரணமடைந்தார். மரணமடைந்த சகாயலதா-வின் வாரிசுதாரரும், கணவருமான திரு. சகாய ஆரோக்கியம்-டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ் நிவாரணத்தொகையாக ரூ.2,00,000/-க்கான காசோலையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு. சந்திரன், துணை இயக்குநர் திரு. வே. லாமேக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்களும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம்.